முருகப்பெருமான் துணை

**மகான் வால்மீகி அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**30.08.2023**, புதன்கிழமை

1. தருமனே கலியுகம் காக்கவந்த
   தலைவனே ஆறுமுக அரங்கனே
   பெருமை மிக்க ஞான வழிகளை
   பின்பற்றி மக்கள் தேறிட
2. தேறிட அருளும் ஞான தேசிகனே
   தெரியவே சோபகிருது யாளி திங்கள்
   அறிவிக்க முன்னான்கோர் திகதி புந்திவாரம்
   (சோபகிருது வருடம் ஆவணி மாதம் 13ம் நாள், 30.08.2023, புதன்கிழமை)
   அறிவுரை ஆசிதனை வால்மீகி யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
   உண்மைபட மக்களை நோக்கி
   ஞானம் தரும் அரங்கன் வழி
   நம்பிக்கை தளரா மக்கள் தொடர
4. தொடரவே அரங்கன் தவபலம்
   தொடர்பும் ஞானசக்தியும் கிட்டி
   இடரை வெல்லும் ஞானிகளாக
   எல்லா பலமும் கண்டு சிறப்பர்
5. சிறப்பான அன்னதான சேவை
   செய்துமே மக்கள் தேறி
   அறத்தின்பலம் அறிவுரையாக
   அனைவருக்கும் தரும் அரங்கன்
6. அரங்கன் உபதேசம் அனைத்தும்
   ஆறுமுகனார் காட்டும் வழி
   வரங்கள் பெற மக்களெல்லாம்
   வணங்கி வழிமொழிந்து

7. வழிமொழிந்து உலகமெலாம் செய்ய
வந்தடையும் சமூக மாற்றமாக
அழிவிலா ஞானப்பாதை
ஆறுமுகனார் ஆசிபட கிடைக்கும்
8. கிடைக்கவே கலியினில் மாற்றம்
குருவருளாக அரங்கன் தவதருமபலம்
தடையற எங்கும் நிரம்பி
தக்க ஞானபூமியாக மாறும்
9. மாறுதலை முழுமைபட தந்து
மக்களை சரியான வகை
ஆறுதல் தந்து மீட்டுமே
ஆறுமுகனார் ஆசிபலமாகி
10. ஆகியே சரவண சோதிஏற்றி
அகிலத்தில் மாற்றம் தரும்படி
மகிழ மக்கள் தேவைகள்
மனமாற பூர்த்தி கண்டிட
11. கண்டிட ஞான ஆட்சி
கந்தப்பெருமான் கருணை ஆட்சி
உண்டாகும் சடுதி உலகில்
உரைத்திட்ட அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–